

புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஆகஸ்டு 17, 2017 | புரட்சி 16 | முழக்கம் 31 | விலை: ரூ.3.00


# திருச்செங்கோட்டில் எழுச்சியூட்டிய பயண நிறைவு விழா மாநாடு





"இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழகத்தின் தனித்தன்மை காப்போம்" என்ற முழக்கத்தை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய 6 நாள் பரப்புரைப் பயணம், திருச்செங்கோட்டில் பயண நிறைவு விழா மாநாடாக எழுச்சியுடன் நடந்தது. ஆகஸ்டு 12 திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கப்பட்ட நாளாகும். மாலை 4 மணியிலிருந்து ஒவ்வொரு பயணக் குழுவினரும் திருச்செங்கோடு நோக்கி வரத் தொடங்கினர். பயணத்துக்கு மக்கள் காட்டிய பேராதரவில் தோழர்கள் உற்சாகத்தில் மூழ்கியிருந்தனர். 6.30 மணியளவில் திருச்செங்கோடு நெல்லுக்குத்தி மண்டபம் அருகில் மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல் தலைமையில் நிகழ்ச்சிகள் தொடங்கின. மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் வரவேற்புரையாற்றியதைத் தொடர்ந்து மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பறை இசை, பயணத்தில் மக்களிடம் நடத்திய வீதி நாடகக் கலை நிகழ்வுகள் தொடங்கின. தொடர்ந்து சென்னை பயணக் குழுவில் வந்த விரட்டு குழுவினரின் பறை. வீதி நாடகம், கலை நிகழ்வுகள் நடந்தன. தொடர்ந்து 5 பயணக் குழுக்கள் சார்பில் குழுவில் பங்கேற்ற ஈரோடு சிவக்குமார், கோவை நிர்மல் குமார், மயிலாடுதுறை இளையராஜா, சென்னை உமாபதி, கோபி வேலுச்சாமி மக்களிடம் சந்தித்த அனுபவங்களை உணர்வு பூர்வமாக பகிர்ந்து கொண்டனர். தொடர்ந்து கழகப் பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன் பயண அனுபவங்களையும் மக்களின் பேராதரவையும் விளக்கிப் பேசினார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மோடி ஆட்சிக்கு எதிரான - மக்களின் எதிர்ப்பை இந்தப் பயணம் உணர்த்தியிருப்பதையும் - தமிழகத்தின் தனித்துவத்தையும் விளக்கிப் பேசினார். இறுதியாக மாநாட்டின் தீர்மானங்களை முன் மொழிந்து நோக்கங்களை விளக்கி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

தொடர்ந்து ஒவ்வொரு பயணக் குழுவினரும் தனித்தனியாக தலைவர், பொதுச் செயலாளரோடு புகைப்படங்களை எடுத்துக் கொண்டனர். பங்கேற்ற தோழர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நாமக்கல் மாவட்ட செயலாளர் ம.சரவணன் நன்றி கூறினார். கழகத் தோழர்களும் பொது மக்களும் பெரும் எண்ணிக்கையில் திரண்டிருந்தனர். நிறைவு விழா மாநாட்டுக்கான நிகழ்ச்சிகளை நாமக்கல் மாவட்டக் கழகத் தோழர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். பயணத்தில் பங்கேற்ற தோழர் களுக்கு இரவு மாட்டுக்கறி பிரியாணி வழங்கப்பட்டது. பயணத்தின் களைப்புகளையும் மீறி மக்கள் பேராதரவில் கிடைத்த மகிழ்ச்சியில் பயணக் குழுவினர் பரப்புரை வாகனங்களில் இரவு 11 மணியளவில் தங்களின் மாவட்டங்களுக்குப் புறப்பட்டனர்.






## மாநாட்டின் தீர்மானங்கள்

# 'ஜனகணமன–வந்தே மாதர'ங்களை கட்டாயப்படுத்தக் கூடாது!

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் 12-08-2017 அன்று நடைபெற்ற, சமூகநீதி சமத்துவ பரப்புரைப் பயண நிறைவு மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்மொழிந்து நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்:

**காவல்துறையில் தனிப் பிரிவு : தீர்மானம் : 1** – ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுப்பதற்கு, மதுரை, சேலம் மாவட்டங்களில் காவல் துறையில் தனிப்பிரிவு ஒன்றை, உயர் நீதிமன்ற ஆணையை ஏற்று, தமிழக அரசு நியமித்திருப்பது, காலம் கடந்த நடவடிக்கை என்றாலும், திராவிடர் விடுதலைக் கழகம் வரவேற்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய தனிப் பிரிவுகள் அமைக்கப்படுவதோடு, அதன் செயல்பாடுகளைக் கண்காணிக்க சமூக ஆர்வலர்கள், மனித உரிமை அமைப்புகளைச் சார்ந்தவர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும், இந்த தனிப்பிரிவு காவல் துறையை தீண்டாமை ஒழிப்புப் பிரிவினைப் போல சடங்குத்தனமான பிரிவாக்கிவிடாமல் உண்மையில் செயல்படக் கூடிய அமைப்பாக இயங்கச் செய்ய வேண்டும் என்றும் திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

**தேச பக்தி : தீர்மானம் : 2** – தேசபக்தி என்பது தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருளாக கருதுவது, தேசபக்தி என்ற உணர்வை சிறுமைப்படுத்துவதேயாகும்; தேசிய கீதமான ஜன கண மன பாடலை, பொழுது போக்கு இடமான திரையரங்குகளில் ஒலிபரப்பி அதற்கு திரைப்படம் பார்க்க வரும் பார்வையாளர்களைக் கட்டாயப் படுத்தி எழுந்த நிற்கச் சொல்கிறது உச்ச நீதிமன்றம். அதே போன்று தேசபக்தி பாடல் என்ற ஒன்று அரசியல் சட்டத்திலேயே இல்லாத நிலையில் பள்ளிகளில் தனியார் நிறுவனங்களில் "வந்தே மாதரம்" பாடலை பாடவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் வழக்கிற்கே தொடர்பில்லாத ஒரு கருத்தை அண்மையில் தெரிவித்திருக்கிறது.

இஸ்லாமியர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு, இந்து இளைஞர்களை வெறியூட்டி தயார் செய்யும் 'ஆனந்த மடம்' நாவலில் அதன் கதைப் பின்னணியில் எழுதப்பட்ட பாடலை தேசிய பாடலாக்கி மத சார்பற்ற நாட்டில் குடி மக்களை அனைவரையும் பாடச் செய்வது, மதச் சார்பின்மை கொள்கைக்கு எதிரான- மத வெறிக்கு உயிரூட்டும் செயலாகிவிடும் என்பதை திராவிடர் விடுதலைக் கழகம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அரசியல் சட்டத்தில் தேசியக் கொடி, தேசிய கீதம் பற்றி கூறப்பட்டுள்ளதே தவிர, தேசியப் பாடல் என்று ஒன்று கூறப்படாத நிலையில் இந்த வந்தே மாதரம் பாடலை பாடுவதற்கு கட்டாயப் படுத்துவது, சட்டத்திற்கு புறம்பானது என்பதால் இந்த

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## திருச்செங்கோடு தீர்மானங்கள்

2012 ஆகஸ்டு 12ஆம் தேதி ஈரோட்டில் உருவானது ‘திராவிடர் விடுதலைக் கழகம்’. தடம் மாறாத பெரியாரியல் பயணத்தை முன்னெடுக்க உறுதி ஏற்று இந்த இயக்கத்தில் ஏராளமான இளைஞர்கள் பங்கெடுத்து களமாட முன் வந்தனர். மாறி வரும் அரசியல் சமூக சூழல்களைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ற செயல் திட்டங்களை உருவாக்கி களப்பணியாற்றி வருகிறது திராவிடர் விடுதலைக் கழகம்.

பொய்யான வாக்குறுதிகளையும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியின் பலவீனங் களையும் மூலதனமாக்கி இந்தியாவின் அதிகாரத்தைப் பிடித்தது பா.ஜ.க. அதிகாரம் தங்களிடம் வந்த பிறகு ஆர்.எஸ்.எஸ். ஆலோசனையுடன் ‘பார்ப்பனிய–மதவாதத்’ திட்டங்களை படிப்படியாக செயல்படுத்தத் தொடங்கி விட்டார்கள். இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தையும் தங்கள் அதிகாரப் பிடிக்குள் கொண்டு வருகிறார்கள். அதற்காக எத்தகைய ‘ஜனநாயக’ படுகொலைகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை என்பதை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்தியப் பார்ப்பனியத்துக்கும் இந்துத்துவ ஒடுக்குமுறை அரசியலுக்கும் நேர் முரணாக மக்கள் விடுதலைக்கான கொள்கைகளைக் கொண்டிருக்கும் வலிமையான கருத்தியல் பெரியாரியம்; அம்பேத்கரியம். இந்த உண்மை, அண்மைக்காலமாக பார்ப்பன மதவாத அரசியலை தடுக்க விரும்பும் அனைத்துக் கட்சிகள் இயக்கங்களாலும் உணரப்பட்டு வருகிறது. இந்த நிலையில் பெரியாரியத்தின் சமூக நீதி அரசியலும் அதன் பண்பாடும் வேர் பிடித்து நிற்கும் தமிழ்நாட்டை வீழ்த்தி விட்டால் இந்தியாவை பார்ப்பனிய பனியாக்கள் ஆதரவோடு காவி நாடாக்கி விட முடியும் என்று திட்டமிட்டு காய்கள் நகர்த்தப்பட்டு வருகின்றன.

இதற்கு பா.ஜ.க. வகுத்திருக்கும் சூழ்ச்சித் திட்டங்கள் இரண்டு. ஒன்று – ஜெயலலிதா மரணத்துக்குப் பிறகு அவரது கட்சியில் உருவாகியுள்ள தலைமைக்கான வெற்றிடத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது; மற்றொன்று தங்களின் சுயநல அரசியலுக்காக சமூகத்தை சீர்குலைக்கும் ஜாதி அரசியலை நடத்தும் சில ஜாதி சங்கத் தலைவர்களை தங்கள் சூழ்ச்சி வலைப்பிடிக்குள் கொண்டு வரும் திட்டம். இந்தத் திட்டத்தில் சில ஜாதித் தலைவர்கள் வீழ்ந்து விட்டார்கள். இந்த ஜாதித் தலைவர்களின் ‘சுயநல’ அரசியலுக்கு எளிதில் பலியாகிவிடக் கூடியவர்கள் அல்ல, தமிழ்நாட்டின் ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள். இந்த நிலையில் தமிழ்நாட்டு மக்களிடம், மோடி ஆட்சியின் மறைமுக பார்ப்பனிய மதவாதத்தையும், நேரடியான மக்கள் விரோத கொள்கைகளையும் அம்பலப்படுத்தி, மக்கள் ஆதரவைத் திரட்ட திராவிடர் விடுதலைக் கழகம் முடிவு செய்தது. அதனடிப்படையில் கருக் கொண்டதுதான் ‘இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழகத்தின் தனித் தன்மைக் காப்போம்’ என்ற பரப்புரைப் பயணம்.

இந்தப் பயணத்தில் மக்களின் நாடித் துடிப்பை உணர முடிந்தது. மோடியின் மக்கள் விரோத கொள்கையின் மீது மக்கள் கடும் கோபத்திலும் எரிச்சலிலும் இருக்கிறார்கள் என்பதே உண்மை. நீட் தேர்வையும் ஜி.எஸ்.டி. வரி விதிப்பையும், தமிழகத்தின் மண் வளங்களை சுற்றுச் சூழலை அழிக்கும் திட்டங்களையும், இந்தித் திணிப்பையும் நியாயப்படுத்தி எந்த ஊரிலும் பா.ஜ.க.வின் பார்ப்பனிய சக்திகள் மேடை போட்டு பேச முடியாது. கழகம் நடத்தியதுபோல் அவர்களின் திட்டங்களை நியாயப்படுத்தும் இயக்கங் களையும் நடத்த முடியாது. இதுவே கள நிலை.

இந்தியாவை ‘இராமராஜ்ய’மாக்கிடும் ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்புக்கு எதிரான சமூக அரசியல் விடுதலையை தீவிரமாக முன்னெடுப்பதின் அவசியத்தை உணர்ந்து, திருச்செங்கோடு நிறைவு விழா மாநாட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் நிறைவேற்றி யிருக்கும் தீர்மானங்களே இன்றைய காலத்தின் தேவை என்று கருதுகிறோம்.

இந்த திசை நோக்கி தமிழகத்தை அழைத்துச் செல்லும் களப்பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க உறுதி ஏற்போம். திருச்செங்கோடு தீர்மானங்கள் தமிழ் நாட்டுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக அமைய வேண்டும்.

# நிறைவு விழா மேடையில் பயணக் குழுவினர்



மதுரை



கோவை



மேட்டூர்



மயிலாடுதுறை



சென்னை

# நீதிபதி ஏ.பி. ஷா பரபரப்பான பேட்டி

# தேசபக்தி – தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள் அல்ல!

*ஒற்றைக் கலாச்சாரத்தை வலிந்து திணிப்பது இந்தியாவை அழித்து விடும் என்று டெல்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் சட்ட ஆணையத்தின் தலைவராகவும் இருந்த அஜித் பிரகாஷ் ஷா (ஏ.பி.ஷா). 'இந்து' ஆங்கில நாளேட்டுக்கு (ஆக.9, 2017) அளித்த பேட்டியில் எச்சரித்துள்ளார்.*

**'தே**சியம்' என்பது குறித்து அவர் கூறுகையில், 'தேச பக்தி, தேசியம்' என்பவை வரையறைகளுக் குட்பட்டதே ஆகும். நைஜிரிய நாட்டின் எழுத்தாளர் சிம்மானந்தா நாகோசி அடிச்சே தேசியம் - தேசபக்தியை ''ஒற்றைக் கதையாடலின் ஆபத்து'' என்று கூறுகிறார். ஒரே கண்ணோட்டத்தில் தேசியத்தைப் பார்க்க முடியாது. 'தேசியம்' என்பது பன்முகத் தன்மையானது என்ற புரிதல் அவசியம். பல்வேறு இனங்கள் கலாச்சாரங்களை உள்ளடக்கியதே 'தேசியம்' என்ற புரிதலுக்கு வராமல் ஒற்றைப் பண்பாடு கொண்டதே தேசியம் என்று செயல்பட்டால் அது 'பாசிசம் -நாசிசம்' என்ற இட்லர், முசோலினியின் கோர முகமாகிவிடும். தேசியத்தை மதத்தின் அடிப்படையில் கட்டமைப்பது ஆபத்தானது. சட்டத்தின் அதிகார முனையில் திணிக்கப்படும் கலாச்சார தேசியம் வெறுப்பையும் பகையையும் உருவாக்கி நாட்டை அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்லும் - பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் நாட்டில் நடக்கும் வன்முறைகள் தேசியத்துக்கு எதிரானவை.

''சமூக நல்லிணக்கத்தை சீர்குலைத்து, ஒரு நாட்டின் வலிமையைக் கட்டமைப்பது, மனிதகுலத்தை சீரழித்துவிடும்'' என்றார் ரவீந்திரநாத் தாகூர். ''இப்போது தாகூர் கருத்துகளையே பாட நூல்களி லிருந்து நீக்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார் ஷா.

தேசம் என்பதற்கான அர்த்தமும் விளக்கமும் காலச் சூழலுக்கு ஏற்ப மாறுபடக் கூடியது. 150 ஆண்டுகளுக்கு முன்பு நாடுகளுக்கான எல்லைகள் மிகவும் அவசியமாக இருந்தன. எல்லைகளைப் பாதுகாப்பதே தேசியம், தேசபக்தி என்ற நிலை இருந்தது. அதற்குக் காரணம், ஒவ்வொரு நாடும் ஒன்றுக்கொன்று பிணைப்புகள் இன்றி தனிமைப் பட்டிருந்தன. எனவே எல்லைகளை வைத்தே தேசபக்தி தேசியம் மதிப்பிடப்பட்டது. இப்போது நிலைமை வேறு. இப்போது நாடுகள் சர்வதேச மயமாகி வருகின்றன. சாதாரண வெகு மக்களின் அடையாளங்கள் ஒன்றோடு ஒன்றாக கலந்து வருகின்றன. எல்லை களுக்குட்பட்டதே 'தேச பக்தி' என்ற கதையாடலுக் குள் நாம் மக்களை மூழ்கச் செய்க கூடாது. அது மக்களை அறிவுக்கு ஒவ்வாத கண்மூடித்தனமான வெறிக்கு இட்டுச் சென்று விடும். அதன் விளைவுகள் மிக மோசமான பாதிப்புகளை உருவாக்கிவிடும். ஆனால், இத்தகைய 'தேசியங்களையே' நாம் இப்போது பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை. இது கவலை தரும் போக்கு என்றார் ஏ.பி.ஷா. (இதே கருத்தைத்தான் பெரியார் தேசியம் குறித்துக் கூறியிருக்கிறார் ''நான் விஸ்தீரணத்துக்காகப் போராடுகிறவன் அல்ல; விடுதலைக்காகப் போராடுகிறவன்'' என்றார் பெரியார். இப்போது சட்ட ஆணையத்தின் தலைவராக இருந்த ஏ.பி.ஷா, "If we allow territorial identity to overwhelm our narrative, we may regress into a situation where people become blinded by a nationality driven by irrationality, which in turn may have extreme consequences" என்று கூறுகிறார். - ஆர்)

தேசபக்தி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உற்பத்திப் பண்டமல்ல; அரசு மீதோ, அரசாங்கத்தின் மீதோ அல்லது பிரதமர் அலுவலகம், இராணுவம், காவல்துறை போன்ற அரசு நிறுவனங் களின் மீதோ 'பக்தியை' தொழிற்சாலைகளைப்போல் உற்பத்தி செய்ய முடியாது. ஆனால், அத்தகைய போக்கு தான் இப்போது நிலவுகிறது. இந்த நிறுவனங்களை கேள்வி கேட்பதே 'தேச விரோதம்' என்கிறார்கள். அரசுக்கு எதிரான நடவடிக்கை என்கிறார்கள். அரசின் தவறான கொள்கைகளையும் சட்ட விரோதமாக நடத்தும் 'என்கவுண்டர்களையும்', வடகிழக்கு மாநிலங்களில் உள்ள இராணுவ சட்டங்களையும் கேள்வி கேட்டாலே 'தேச விரோதம்' என்று முத்திரை குத்தப்படுகிறது. பிரிட்டிஷ் காலத்தில் இத்தகைய சட்டங்களை எதிர்த்துத்தான் திலகரும் காந்தியும் போராடினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அதே சட்டங்கள் இப்போது தேசபக்தி சட்டங்களாகிவிட்டன. அரசு நிறுவனங்களை விமர்சித்து பேசுவதே தேச



விரோதமாகிவிடாது என்று உச்சநீதிமன்றம் பலமுறை தெளிவுபடுத்தியிருந்தாலும், அது குறித்து கவலைப்படாமல், தேச விரோத சட்டங்களின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது மிகவும் கவலை தரும் போக்காகும். சட்டங்கள் வழியாக தேசபக்தியை திணிக்க முடியாது என்று காந்தி கூறியதோடு, 'விமர்சனங்களை தாராளமாக அனுமதிக்க வேண்டும்' என்றார். 'கேதார் நாத்சிங் எதிர் பீகார் அரசு' வழக்கில் (1962) உச்சநீதிமன்றமும் இதையே கூறியிருக்கிறது. ஆனால், தேசத் துரோக வழக்குகளில் குற்றச்சாட்டுகளை பதிவு செய்யும்போது வாதங்களில் இந்த திசையில் நடப்பது இல்லை. 'தேச விரோத சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது' என்று கூறினாலேகூட அதுவும் 'தேச விரோதம்' என்று முத்திரை குத்தப்படுவதுதான் இன்னும் மோசமானது. ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள், மருத்துவர் விநாயக்சென், அருந்ததிராய் அணு உலையை எதிர்த்துப் போராடிய இடிந்தகரை மக்கள் மீது இதுதான் நடந்தது.

பேச்சுரிமை, கருத்துரிமை நியாயங்களின் வரம்புகளுக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மாற்றுக் கருத்துகளே கூடாது என்பது சரியல்ல; மராட்டிய மொழியில் 'நான் கோட்சே பேசுகிறேன்' என்ற நாடகத்தை, காந்தி கொலையை நியாயப்படுத்தி நடத்தினார்கள். 2001ஆம் ஆண்டு நாடகத்துக்கு எதிரான வழக்கில் மாற்றுக் கருத்துகளை சகித்துக் கொள்வதுதான் ஜனநாயகப் பண்பு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனந்த்பட் வர்த்தன் தயாரித்த ஒரு ஆவணப் படத்தை தூர்தர்ஷன் ஒளிபரப்ப மறுத்தது. 'In memory of my friends' (எனது நண்பர்களின் நினைவுக்காக) என்பது அந்த ஆவணப் படத்தின் பெயர் 1966ஆம் ஆண்டு நடந்த இந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், 'வெளிப் படையான விவாதங்களை தடுக்கும் உரிமை அரசுகளுக்கு கிடையாது' என்று கூறியது. ''ஒரு ஜனநாயகத்தில் எல்லோரும் ஒரே பாடலைத்தான் பாட வேண்டும் என்பதற்கான தேவையில்லை'' என்று 'எஸ்.இராமலிங்கம் எதிர் பி. ஜெகஜீவன்ராம் வழக்கில் (1989) உச்சநீதிமன்றம் தெளிவாகவே கூறியது. (In a democracy, it is not necessary that everyone should sing the same song.)

''தேசத் துரோகச் சட்டத்தை (Sedition Law) சட்டப் புத்தகத்திலிருந்தே எடுத்துவிடவேண்டும். இந்தச் சட்டம் வழங்கும் வரம்பற்ற அதிகாரங்களைக் கைவிட அரசுகள் விரும்பவில்லை. எனவே அந்தச் சட்டத்தைப் பாதுகாக்க விரும்புகிறார்கள்'' என்றார் ஷா.

தேச பக்திக்கான சட்டங்களைப் பயன்படுத்தி நீதிமன்றங்களே நம்முடைய அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தி வருவதையும் பார்க்கிறோம். திரையரங்குகளில் தேசிய கீதம் பாடலுக்கு எழுந்து நிற்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது. அடிப்படை உரிமைகளில் குறுக்கீடுவதாகும். சென்னை உயர்நீதிமன்றம் 'வந்தே மாதரம்' பாடலை பாடச் சொல்லியிருக்கிறது. ஒரு பாடலை பாட வைப்பதும் அதற்கு எழுந்து நிற்க வைப்பதும் நேர்மையான தேசபக்திக்கான 'நிகழ்ச்சி நிரல்' இல்லை என்பதை நீதிமன்றங்கள் உணர வேண்டும். ஆனால் இதை நீதிமன்றங்கள் உணரத் தவறிவிட்டன. மக்களும் எழுந்து நிற்கிறார்கள்; பாடுகிறார்கள் என்றால் சட்டத்துக்குப் பயந்துதானே தவிர தேசப்பற்றால் அல்ல; எழுந்து நிற்காவிட்டால் அடி விழலாம் என்று அஞ்சுகிறார்கள். அந்தப் பாடல்களின் அர்த்தம்கூட மக்களுக்குத் தெரியாது. (People now sing or stand not because truly they respect the sentiment that these songs or poem convey, but because they are afraid of being beaten up)

அதேபோல் மக்கள் விரும்பும் உணவை உண்ண அனுமதி மறுப்பது, அதற்கு கலாச்சாரம் என்று கூறுவது எல்லாம் ஏற்க முடியாதவை. இது திணிக்கப்படும் கலாச்சார தேசியம் (Enforced cultural nationalism). பன்முகத் தன்மை கொண்ட ஒரு நாட்டை ஒற்றைக் கலாச்சாரத்துக்குள் திணிக்கும் முயற்சிகளை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. ஆதார் வழக்கில் ''ஒரு குடிமகனின் அந்தரங்கத்தைக் காப்பாற்றுவது அடிப்படை உரிமையல்ல'' என்று அரசு வாதாடுகிறது. மனித மாண்புக்கான அடிப்படைகளில் மிகவும் முக்கியமானது ஒருவரது அந்தரங்கமான தனிப்பட்ட உரிமை. அவற்றில் பல வகை உண்டு.. இதில் எந்த வகையான 'அந்தரங்க உரிமை' சரி அல்லது தவறு என்று தனித்தனியாகப் பார்க்க வேண்டும். ஒட்டு மொத்தமாக அந்தரங்க உரிமை (Right to Privacy) அடிப்படை உரிமையல்ல என்று வாதிடுவது தவறு. இது அரசுக்கும் குடிமக்களுக்கும் எதிரான வழக்கு. நீதிமன்றம் குடிமக்கள் சார்பாகவே உறுதியாக நிற்கவேண்டும்'' என்றார் ஏ.பி.ஷா.

(தமிழில் சுருக்கமாக 'இரா')

### ''இராவணன்''

**தி**ருச்செங்கோடு நிறைவு விழா மாநாட்டு மேடையில் மணி - பிரியா இணையரின் ஆண் குழந்தைக்கு 'இராவணன்' என்று தோழர் கொளத்தூர் மணி பெயர் சூட்டினார்.

# நிறைவு விழா மாநாட்டை சிறப்புடன் நடத்திய திருச்செங்கோடு தோழர்கள்



DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# வெளியுறவுக் கொள்கைகளை தீர்மானிப்பதில் மாநிலங்களுக்கு உரிமை வேண்டும்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியை கைவிட வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

**வெளியுறவு கொள்கை : தீர்மானம்: 3 –** இந்திய அரசியல் சட்டத்தின் 253ஆவது பிரிவு வெளிவிவகாரத் துறை தொடர்பான முழு அதிகாரங்களை யும் நடுவண் அரசுக்கே வழங்கியிருக் கிறது; அதே நேரத்தில் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, மாநிலங் களுக்கு அரசியல் சட்டம் வழங்கி யிருக்கும் உரிமைகளையும், வெளி விவகாரத்தோடு தொடர்பு படுத்தி, நடுவண் அரசு பறித்துக் கொள் கிறது. வெளிவிவகாரத் துறையில் மாநில அரசுகளின் உரிமைகள் முற்றாக விலக்கி வைக்கப்பட் டுள்ளதால் ஈழத் தமிழர் பிரச்சனை உள்ளிட்ட, தமிழர் களின் பல உரிமை பிரச்சனைகளில் நடுவண் அரசே தன்னிச்சையாக முடிவுகளை எடுத்து வருகிறது.

ஆஸ்திரேலியா போன்ற பல நாடு களில் வெளிநாட்டுக் கொள்கைகள் சர்வதேச உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் தொடர்புடைய மாநில அரசுகளின் ஒப்புதலுக்குப் பிறகே முடிவெடுக்க முடியும் என்ற நிலை இப்போதும் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம். இந்த நிலையில் இந்திய வெளியுறவுக் கொள்கை முடிவுகளை எடுக்கும் முன்பு, குறைந்தபட்சம் தொடர்புடைய மாநிலங்களோடு கலந்து ஆலோசித்து அதன் ஒப்புதலைப் பெறவேண்டும் என்ற வகையில் நடுவண் அரசு சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் தமிழர் உரிமைக்காக போராடும் அரசியல் கட்சிகள், இயக்கங்கள் இக்கருத்தை வலியுறுத்த வேண்டும் எனவும் திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

**இந்தி திணிப்பு : தீர்மானம் : 4 -** 1938ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இராஜகோபாலாச்சாரி கட்டாயமாக இந்தி மொழிப் பாடத்தைத் திணித்தபோது, 'பெரியார் தலைமையில் தமிழறிஞர்களும் இணைந்துப் போராடி, இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தியது தமிழ்நாடு ஆகும். 1965ஆம் ஆண்டி லிருந்து அலுவல் மொழி இந்தி என்று அரசியல் சட்டம் கூறிய நிலையிலும் தமிழ் நாட்டில் இந்திக்கு இடமில்லை என்று 1968இல் இருமொழித் திட்டத்தை அறிவித்த நாடு தமிழ்நாடு. 1963ஆம் ஆண்டு அலுவல் மொழிச் சட்டம் இந்தியை அலுவல் மொழி என்று அறிவித்த நிலையிலும் அந்த சட்டம் தமிழ்நாட்டுக்கு மட்டும் பொருந்தாது என்று 1976ஆம் ஆண்டு நடுவண் அரசின் அலுவல் மொழி விதிகளே ஏற்றுக் கொண்டது என்பது வரலாறு. கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்திக்கு இடமே இல்லாத நிலையில் நடுவண் பா.ஜ.க. ஆட்சி இப்போது இந்தித் திணிப்பு வழியாக சமஸ்கிருத பார்ப்பனப் பண்பாட்டைத் திணிக்க முயல்கிறது.

நாடாளுமன்றத்தில் இந்தி பேசும் மாநில அமைச்சர்கள் இந்தியிலேயே பேசுவார்கள் என்றும், தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பாடத் திட்டத்தின்கீழ் இயங்கும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் விமான நிலைய அறிவிப்புகளில் - மைல் கற்களில் இந்தித் திணிக்கப்படு வதோடு, ஐ.ஐ.டி.யில் சமஸ்கிருதம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பல மொழி, இன, பண்பாடுகளைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தை, இந்தி சமஸ்கிருத இந்து இந்தியா என்ற ஒற்றைத் தேசமாகக் கட்டமைக்க முயல்கிறது. இந்த ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்பை தமிழ்நாடு ஒருபோதும் ஏற்காது என்று நடுவண் அரசிற்கு இம்மாநாடு எச்சரிக்க விரும்புகிறது.

தமிழர்களின் தனித்துவமான சுய மரியாதை சமூக நீதிப் பண்பாட்டை சீர்குலைக்கும் இந்தப் பார்ப்பனியப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்திட தமிழர்கள் கட்சி, இயக்க வேறுபாடு களைக் கடந்து அணி திரளவேண்டும் என்று இம்மாநாடு அறைகூவல் விடுக்கிறது.

**தடுப்புக் காவல் சட்டங்கள்: தீர்மானம் : 5 –** குற்றமிழைத்தவர் களைத் தண்டிக்க ஏற்கனவே இந்தியத் தண்டனைச் சட்டம் இருக்கும்போது கூடுதலாக, அரசுகள் தடுப்புக் காவல் சட்டங்களை இயற்றிக் கொள்கின்றன. பிணையில் வெளியே வருவதைத் தடுப்பதும், குறைந்தது ஓராண்டு காலமாவது சிறையில் முடக்கி வைப்பதுமே இதன் நோக்கம். இந்த சட்டங்கள் அரசியல் எதிரிகளைப் பழிவாங்குவதற்கும், சமூக, அரசியல் செயற்பாட்டாளர்களை ஒடுக்கு வதற்குமே பயன்படுத்தப் படுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சியில் ரவுலட் சட்டத்தை எதிர்த்தவர்கள் "சுதந்திர" இந்தியாவில் அதைவிடக் கொடூரமான ஒடுக்குமுறை சட்டங் களைக் கொண்டு வந்தும், ஆங்கிலேயர்கள் நம்மை ஒடுக்கு வதற்குப் பயன்படுத்திய அதே "தேச துரோக" சட்டங்களை இப்போதும் மக்களுக்கு எதிராக ஏவி மக்களை ஒடுக்குவதும் ஜனநாயகத்திற்கே தலைகுனிவாகும்.

காஷ்மீரிலும், பல வடகிழக்கு மாநிலங்களிலும் இராணுவச் சட்டங்களே கோலோச்சி வருகின்றன. இத்தகைய தடுப்பு காவல் சட்டங் களை குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது மரண தண்டனை வழங்கு வதற்கும், பிணையில் வெளிவராமல் சிறைக் காவலில் தடுத்து வைப்பதற்கும் பயன்படுத்துவது சட்ட விரோத மானது என்பதுடன் தனி மனித சுதந்திரத்தைப் பறிப்பதாகும் என்று அண்மையில் கூட உச்சநீதிமன்றம் இடித்துரைத்திருக்கிறது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் குண்டர் சட்டம் கண்மூடித்தனமாக சமூக செயல்பாட்டாளர்கள் மீதும் ஏவி விடப்படுவது வன்மையான கண்டனத்துக்குரியது. முள்ளிவாய்க் கால் இனப் படுகொலைக்கு உள்ளான ஈழத்தமிழர் களுக்காக அஞ்சலி தெரிவிக்க சென்னை மெரீனா கடற் கரையில் கூட முயன்ற திருமுருகன் காந்தி, டைசன், இளமாறன், அருண்குமார், வெறும் துண்டறிக்கை வழங்கிய மாணவி வளர்மதி ஆகிய தோழர்கள் மீது குண்டர் சட்டத்தை தமிழக அரசு ஏவி விட்டிருப்பது சட்டம் மிக மோசமாக முறையற்றுப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா ஈழத்தில் இறுதிப் போரில் நடந்தது இனப்படுகொலையே என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்த அதே குரலை அதே உணர்வை வெளிப்படுத்த முயன்றவர்கள் மீது "அம்மாவின்" ஆட்சி என்று கூறிக் கொள்கின்றவர்கள் குண்டர் சட்டத்தை ஏவி விட்டிருப்பது - அவர் களின் தலைவர் அறிவித்த கொள்கை களுக்கு இழைக்கும் துரோகம் என்பதை இம்மாநாடு சுட்டிக் காட்டுவதோடு, கைது செய்யப் பட்டவர்கள் மீது பிறப்பிக்கப்பட்ட குண்டர் சட்டத்தை உடனே திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்து கிறது.




மேட்டூர் பயணக் குழு கலை நிகழ்ச்சி

**உணவு உரிமை : தீர்மானம் : 6 –** பசு, எருது, எருமை, கன்றுக்குட்டி, ஒட்டகம் ஆகியவற்றை இறைச்சிக்காக சந்தைகளில் விற்கக் கூடாது என்று பா.ஜ.க பிறப்பித்துள்ள உத்தரவு மக்களின் உணவுக் கலாச்சார உரிமைகளையும், மாநில உரிமை களையும் பறிப்பதாகும். உலகிலேயே மாட்டிறைச்சி ஏற்றுமதியில் முதலிடத்தில் இருக்கும் இந்தியாவின் பொருளாதாரத்தையும், விவசாயி களின் வாழ்வுரிமையையும் கடுமையாக பாதிக்கும் இந்த ஆணையை நடுவண் அரசு உடனடியாக திரும்பப்பெற வேண்டும்.

உழைக்கும் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் மாட்டிறைச்சியை மதத்தைக் காட்டி தடுக்கவும், அதன் விற்பனைகளுக்கு நெருக்கடிகளை கொண்டு வரவும் முயற்சிப்பது இந்தியாவைப் பார்ப்பன தேசமாக்கும் சூழ்ச்சியே ஆகும். அரசின் இந்த கலாச்சார உரிமைப் பறிப்பு களுக்கு எதிராக தமிழ்நாடு, கேரளம், கர்நாடக மாநிலங்கள் வீறு கொண்டு எழுந்து நிற்கின்றன.

இந்நிலை தொடருமானால் வட நாட்டிலிருந்து தென்னாட்டை பிரித்து விடுங்கள் என்ற போராட்ட முழக்கங்கள் கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலும் ஒலிக்க தொடங்கியிருப்பது, தென்னகத்தின் கொதி நிலையை உணர்த்துகின்றது என்பதோடு வட நாட்டுப் பார்ப்பன பண்பாட்டுக்கு எதிராக உருவாகி வரும் இந்த எழுச்சியை வளர்த்தெடுத்து, தமிழகத்தின் தனித்துவத்தை காப்போம் என்று இந்த மாநாடு உறுதியேற்கிறது.

**தனி அரசியல் சட்டம் : தீர்மானம் : 7 –** இந்திய அரசியலமைப்பு இந்தி யாவை 'மாநிலங்களின் ஒன்றியம்' என்று அறிவிக்கிறது. மாநிலங்கள் இல்லாமல் இந்தியா என்ற நாடு இல்லை; ஆனால் மாநிலங்களின் 'இறையாண்மை'யை ஒடுக்கி, இந்தியாவை ஒற்றை தேசமாக்கி ஒற்றைப் பண்பாடு என்ற பெயரில் பார்ப்பனிய வேதமதப் பண்பாட்டை நடுவண் பா.ஜ.க. ஆட்சி கல்வி, மொழி, உணவு, பண்பாட்டுத் துறை களில் திணித்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே மாநிலப் பட்டி யலிலிருந்த கல்வி உரிமை பறிக்கப் பட்டு, ஆள் தூக்கி அடக்குமுறை சட்டங்களும் மாநிலங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. இந்த நிலையில் இந்த உரிமை பறிப்புகளைத் தடுத்திடவும், தமிழ்நாட்டுக்கே உரிய சமூக நீதி சுயமரியாதைப் பண்பாடுகளைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கவும் தமிழ்நாட்டுக்கு தனியான அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளும் உரிமைப் போராட்டத்தை தொடங்க வேண்டிய சூழல் உருவாகி விட்டது. அண்டை நாடான மியான்மார் நாட்டில் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து ஜனநாயக ஆட்சி மலர்ந்துள்ள நிலையில் அந்நாட்டில் அடங்கியுள்ள 7 மாநிலங்கள் 7 மண்டலப் பிரதேசங்கள் தனித்தனியாக அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்று மியான்மார் அரசே முடிவெடுத்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் ஆயுதம் தாங்கிப் போரிட்ட போராளிக் குழுக்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வரு கிறது. மாறி வரும் சர்வதேச சூழல்களைக் கருத்தில் கொண்டு ஒற்றை ஆட்சி ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்பை எதிர்க்க தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங் களுக்கும் தனித்தனியாக அரசியல் சட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

அய்.நா. பொது அவையின் உரிமை சாசனத்தில் 1514 (15)வது பிரிவு 1960ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பு வழங்கியுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இந்தியாவின் பன்முகத் தன்மை பன்முகக் கலாச்சாரத்தைக் காப்பாற்றிட விரும்பும் தேசிய இனங்கள் விரும்பினால் பிரிந்து போகும் உரிமையுள்ள சுய நிர்ணய உரிமை கொண்ட தன்னாட்சி என்ற இலட்சியத்தை நோக்கிய விவாதங் களைத் தொடர வேண்டிய அவசியத்தையும் இம்மாநாடு சுட்டிக் காட்டுகிறது. ●

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th August 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN